மேல்விஷாரம் நகராட்சி
நாள்:11.10.2018.

அவசரக்கூட்டம்

மேல்விஷாரம் நகராட்சியில் அவசரக்கூட்டம் நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் 11.10.2018ந் தேதி வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில் நடைபெற உள்ளது.

11/10/2018

தனிஅலுவலர்,
மேல்விஷாரம் நகராட்சி

பொருள்கள்:-

1. அரசாணை (நிலை) எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MV.IV) துறை நாள்:19/07/2018 மற்றும் அரசாணை (நிலை) எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(MV.IV) துறை நாள்:26/07/2018 ஆகியவற்றில் நகராட்சிகளில் 01/04/2018ம் முதல் சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது. மேற்க்கண்ட அரசாணையைத் தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கை ந.க.எண்.20555/2018/R1, நாள்:20/08/2018-ல் சொத்து வரி பொது சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணைகள், சுற்றறிக்கை மற்றும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, அட்டவணை 4ல் உள்ள விதிகளில் குறிப்பிட்டுள்ள அதிகாரங்கள் ஆகியவற்றின்படி மேல்விஷாரம் நகராட்சியில் 01/04/2018 முதல் சொத்துவரி பொது சீராய்வு மேற்க்கொள்ளப்பட உள்ளது.

அரசாணை (நிலை) எண்.73 மற்றும் 76-ன்படி சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டிய விவரங்களின் பட்டியல்:

வ.எண்	கட்டிடப் பயன்பாடு விபரம்	01.04.2018ம் தேதி முதல் சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டிய சதவீதம்
1.	குடியிருப்பு கட்டிடங்கள் (உரிமையாளர் மற்றும் வாடகை குடியிருப்புகள்)	50% சதவீதத்திற்குமிகாமல்
2.	குடியிருப்பு அல்லாத அனைத்து கட்டிடங்கள்	100% சதவீதத்திற்குமிகாமல்

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியிலுள்ள தெருக்கள் மற்றும் சாலைகள் A,B மற்றும் C என மூன்று மண்டலங்களாக வகைப்படுத்தி அவற்றிற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு உயர்வு செய்யவும், அதன் அடிப்படையில் சொத்துவரி பொதுசீராய்வு செய்யவும் மேற்கண்ட சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணைகள் மற்றும் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளவாறு நகராட்சி பகுதியிலுள்ள 156 தெருக்கள் A,B மற்றும் C என மூன்று மண்டலங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

A,B,C என வகைப்படுத்தப்பட்டுள்ள தெருக்களின் விபரங்கள்

வரிசை எண்	மண்டலம்	தெருக்களின் எண்ணிக்கை
1	A	18
2	B	114
3	C	24
மொத்தம்		156

அரசாணை (நிலை) எண்.73 மற்றும் 76; நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.20555/2018/R1, நாள்:20.08.2018 ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகள் மற்றும் வழிகாட்டுதல்கள்படி 01/04/2018-ம் தேதி முதல் நகராட்சி பகுதியிலுள்ள அனைத்து கட்டிடங்களுக்கும் சொத்துவரி பொதுசீராய்வு செய்திடவும், நகராட்சி பகுதியிலுள்ள தெருக்கள்/சாலைகள் A,B மற்றும் C என மூன்று மண்டலங்களாக வகைப்படுத்தியும், ஒவ்வொரு மண்டலத்திற்கும் கீழ்க்கண்ட பட்டியலில் குறிப்பிட்டுள்ளபடி அடிப்படைமதிப்பு நிர்ணயம் செய்தும் மேல்விஷாரம் நகராட்சியின் நகரமன்றத் தீர்மானம் எண்.232, நாள்:10/09/2018-ன்படி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மண்டலம்	சதுர அடிக்கான அடிப்படை மதிப்பு	
	தற்போதைய மதிப்பு	உயர்த்தப்பட்டுள்ள மதிப்பு
A	0.70	1.20
B	0.50	0.90
C	0.30	0.60

மேலும், மேல்விஷாரம் நகராட்சியில் உள்ள 156 தெருக்கள்/சாலைகள் A,B மற்றும் C என மூன்று மண்டலங்களாக வகைப்படுத்தி, அம்மண்டலங்களுக்கான அடிப்படைமதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டதை 11.9.2018-ம் தேதிய மாலை முரசு நாளிதழில் வெளியிட்டும், நகராட்சி அலுவலக விளம்பர பலகையில் ஒட்டி விளம்பரப்படுத்தியும், நகராட்சி வலையதளத்தில் வெளியிட்டும், ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணைகள் ஏதும் இருந்தால் பொதுமக்கள் ஆணையருக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அறிவிப்பு வெளியிடப்பட்ட 30 தினங்களுக்குள் தெரிவிக்க அறிவிக்கப்பட்டது. ஆனால், அறிவிப்புகள் வெளியிடப்பட்டு 30 தினங்கள் 10.10.2018 அன்று முடிவடைந்துள்ள நிலையில் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணைகள் எதுவும் வரப்பெறாத காரணத்தால், நகராட்சியில் உள்ள 156 தெருக்கள்/சாலைகள் A,B மற்றும் C என மூன்று மண்டலங்களாக வகைப்படுத்தி ஒவ்வொரு மண்டலத்திற்கும் நகரமன்றத் தீர்மானம் எண்:232, நாள்:10.09.2018ன்படி அடிப்படைமதிப்பு நிர்ணயம் செய்துள்ளதை இறுதி செய்ய மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1.மேலே குறிப்பிட்டுள்ள அரசு ஆணைகள் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையில் வழங்கியுள்ள வழிகாட்டுதலின் படி 01.04.2018-ம் தேதி முதல் குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50% சதவீதத்திற்கு மிகாமலும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு 100% சதவீதத்திற்கு மிகாமலும் சொத்துவரி உயர்வு செய்திட மேல்விஷாரம் நகராட்சி அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேல்விஷாரம் நகராட்சியில் உள்ள 156 தெருக்கள்/சாலைகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளபட்டியலில் கண்டுள்ளவாறு A, B மற்றும் C என மூன்று மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதை உறுதி செய்து மன்றம் அங்கீகரிக்கலாம்.

3.அ) மண்டலம் A-யில் வகைப்படுத்தப்பட்டுள்ள தெருக்கள் மற்றும் சாலைகளுக்கான அடிப்படை மதிப்பு சதுர அடி ஒன்றிற்கு ரூ.0.70 லிருந்து ரூ.1.20 ஆக உயர்வு செய்யப்பட்டதை மன்றம் உறுதி செய்து அனுமதி வழங்கலாம்.

ஆ)மண்டலம் B-யில் வகைப்படுத்தப்பட்டுள்ள தெருக்கள் மற்றும் சாலைகளுக்கான அடிப்படை மதிப்பு சதுர அடி ஒன்றிற்கு ரூ.0.50லிருந்து ரூ.0.90 ஆக உயர்வு செய்யப்பட்டதை மன்றம் உறுதி செய்து அனுமதி வழங்கலாம்.

இ) மண்டலம் C-யில் வகைப்படுத்தப்பட்டுள்ள தெருக்கள் மற்றும் சாலைகளுக்கான அடிப்படை மதிப்பு சதுர அடி ஒன்றிற்கு ரூ.0.30லிருந்து ரூ.0.60 ஆக உயர்வு செய்யப்பட்டதை மன்றம் உறுதி செய்து அனுமதி வழங்கலாம்.

4.இந்த மன்ற தீர்மானம் நிறைவேற்றப்படும் நாளிலிருந்து மேல்விஷாரம் நகராட்சியில் புதிய சொத்துவரி நிர்ணயம் செய்யப்படும் அல்லது சொத்துவரி திருத்தியமைக்கப்படும் அனைத்து வகையானக் கட்டடங்களுக்கும் இம்மன்ற தீர்மானத்தில் வகைப்படுத்தப்பட்டுள்ளபடி மண்டலங்கள் மற்றும் அவற்றிற்கான அடிப்படை மதிப்பு எடுத்துக் கொள்ளப்பட்டு சொத்துவரி விதிப்பு செய்யவும் மன்றம் இறுதி ஒப்புதல் அளிக்கலாம்.

ந.க.எண்.0630/2018/ அ1

2. இந்நகராட்சி அலுவலக உபயோகத்திற்காக பயன்படுத்தப்பட்டு வந்த 3 KVA UPS-ல் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்தல், புதியதாக 5 KVA UPS சப்ளை செய்தல் மற்றும் இதர மராமத்து பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு நகரமன்றம் தனது தீர்மான எண்:141. நாள்:01.06.2018ல் அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் 31.08.2018ந் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

வ. எண்	பணியின் பெயர்	மதிப்பீடு ரு.இலட் சத்தில்	ஒப்பந்ததாரர் பெயர்	மதிப்பீடு விகிதம்
1.	அலுவலக உபயோகத்திற்காக பயன்படுத்தப்பட்டு வந்த 3 KVA UPS-ல் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்தல், புதியதாக 5 KVA UPS சப்ளை செய்தல் மற்றும் இதர மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல்.	3.00	MKS Battery Centre, 389, Rajiv gandhi Nagar, GK Hospital Backside, Sipcot, Ranipet-03	மதிப்பீட்டை விட -0.25% குறைவு
			Ramesh Battery World, 53, Bazaar Street, MN Complex MBT Road, Walajapet	மதிப்பீட்டை விட +1.50% அதிகம்

அலுவலகக்குறிப்பு:-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட -0.25% குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள MKS Battery Centre, 389, Rajiv gandhi Nagar, GK Hospital Backside, Sipcot, Ranipet-03 அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

3.பணயின் அவசர அவசியம் கருதி தனிஅலுவர் அவர்களின் முன்னுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:124/2018/இ1.

3. மேல்விஷாரம் நகராட்சி 05.01.2011 முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி 8.67 சதுர கி.மீ புவியியல் பரப்பளவுடன் 21 வார்டுகள் கொண்டதாக உள்ளது.

அரசாணை (நிலை) எண்.101, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுங்கல் துறை, நாள் 30.04.1997ல் வெளியிடப்பட்டுள்ள அளவுகோளின்படி துப்புரவு பணியாளர்களின் தேவை கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

நகராட்சியில் உள்ள மொத்த குடியிருப்புகள் எண்ணிக்கை – 8086

வ,எண்	விவரம்	தேவைப்படும் பணியாளர்கள்
1	குடியிருப்புகளுக்கு – பணிபுரிய தேவைப்படும் பணியாளர்கள்	99
2	அ) டிப்பர் லாரி – 1	2
3	ஆ) டம்பர் பிளேசர் – 1	1
4	இ) LCV – 3	3
5	ஈ) டிராக்டர் – 2	4
	மொத்தம்	109

மேற்கண்டுள்ள கணக்கீட்டின் படி மேல்விஷாரம் நகராட்சியில் 109 துப்புரவு பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். தற்போது இந்நகராட்சியில் 25 நிரந்தர பணியாளர்களும் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ROC.NO.44331/P3/2012, நாள் 14.12.2012ல் 48 தனியார்மயம் துப்புரவு பணியாளர்களை நியமித்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டு பணியில் உள்ளனர். இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செம்மையாக செயல்படுத்த 36 கூடுதல் துப்புரவு பணியாளர்களை நியமிக்க ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்ததாரர் மூலமாக துப்புரவு பணியில் ஈடுபடுத்தப்படவேண்டியுள்ளது.

வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தினக்கூலி அடிப்படையில் 36 துப்புரவு பணியாளர்களுக்கான தினக்கூலி நிர்ணயம் செய்யப்பட்டு கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

துப்புரவு பணியாளர்கள் செலவினங்கள் விவரம் ;

வ.எண்	விவரங்கள்	செலவினங்கள்
1	வேலூர் மாவட்ட ஆட்சியர் – அவர்களின் தினக்கூலி பட்டியல் படி (துப்புரவு பணியாளர்களுக்கு 2018–2019ம் ஆண்டுக்குரிய– தினக்கூலி)	ரூ. 336/–
2	ஒரு துப்புரவு பணியாளருக்கு 1 ஆண்டுக்குரிய கூலி (317 x 336)	ரூ.1,06,512/–
3	EPF AND E.S.I – 13.5 %	ரூ.14,380/–
4	சீருடை மற்றும் பாதுகாப்பு உபகரணங்களுக்கு 1 ஆண்டுக்குரிய செலவின தொகை	ரூ.1,500/–
5	ஒப்பந்ததாரருக்குரிய நிர்வாக செலவு 10%	ரூ.10,651/–
	மொத்தம்	ரூ.1,33,043/–
6	36 துப்புரவு பணியாளர்களுக்கு 1 ஆண்டுக்குரிய செலவினம் ரூ. 1,33,043 x 36	ரூ.47,89,548/–

மேல்விஷாரம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டு பகுதிகளிலும், திடக்கழிவு மேலாண்மை பணிகள் திறம்பட செயல்படுத்தவும், 36 துப்புரவு பணியாளர்களும் ஒப்பந்தப்புள்ளி கோரி 3 வருடங்கள் பணியில் ஈடுபடுத்தவும் இதற்கான ஒரு வருடத்திற்கானச் செலவினம் 48.00 இலட்சம் நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும், ஒவ்வொரு ஆண்டின் முடிவிலும் பணித்திறன் மதிப்பீடு செய்து ஒப்பந்த தொகையில் 10% உயர்வு செய்யவும் மன்றத்தின் ஒப்புதல் பெற்று ஒப்பந்தம் புதுப்பிக்க நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை, அரசு ஆணை எண்.101 நாள் : 30.04.1997–ன் படி துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை – 109 ஆகும். நிரந்தர துப்புரவு பணியாளர்கள் 25 நபர்கள், ஒப்பந்த துப்புரவு பணியாளர்கள் 48 நபர்கள், பற்றாக்குறை உள்ள துப்புரவு பணியாளர்கள் 36 நபர்கள் ஆகும். மேற்படி பற்றாக்குறை உள்ள 36 துப்புரவு பணியாளர்களை நியமித்துக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேல்விஷாரம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணி மேற்கொள்ள 36 துப்புரவு பணியாளர்களை 3 வருடம் பணியில் ஈடுபடுத்த நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்கள் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.
3. ஒப்பந்தம் செய்யும் நாளிலிருந்து 1 ஆண்டு முடியும் போது பணித்திறன் மதிப்பீடு செய்து ஒப்பந்தத் தொகை உயர்வு செய்து மன்ற ஒப்புதலுடன் ஒப்பந்தம் புதுப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.
4. ஒப்பந்தம் மேற்கொள்ளும் நாளிலிருந்து முதல் ஒரு வருடம் காலத்திற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.48.00/– இலட்சம் நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 1149 /2016/எச்1.

4. மேல்விஷாரம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் 2018-2019ன் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்:07, கையூம் சகர் மற்றும் வார்டு எண்:06, மாக்பந்து நகர் ஆகிய பகுதிகளில் தார் சாலை அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால்வாயுடன் கூடிய சிறுபாலம் அமைத்தல் பணியினை மதிப்பீடு ரு.50.00 இலட்சத்தில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-05 அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்:12981/2018/இ3. நாள்:21.08.2018ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 26.09.2018ந் தேதியன்று மின்னணு முலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்ப தகுதி ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில், இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளது அதனை தொடர்ந்து இவ்விரு ஒப்பந்தப்புள்ளிகளின் விலை ஒப்பந்தப்புள்ளிகள் 28.09.2018ந் தேதியன்று திறக்கப்பட்டது.

மேலும் மதிப்பீடு விகிதத்திற்கு கூடுதலாக 4.84% ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எம்.இரபிக் அகமது, நகராட்சி ஒப்பந்ததாரர், மேல்விஷாரம் அவர்களுக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்:0423/2018/இ1. நாள்:28.09.2018ல் மேற்படி விலை விகிதங்கள் குறைத்து கொடுக்க கேட்டுக் கொள்ளப்பட்டது.

மேலும், மேற்படி ஒப்பந்ததாரர் தனது 01.10.2018ந் தேதிய கடிதத்தில் தற்சமயம் அரசு நிர்ணயித்த விலையை காட்டிலும் கட்டுமான பொருட்களின் விலை மற்றும் வேலை ஆட்களின் கூலி அதிகமாகவுள்ளதாகவும், எனவே ஒப்பந்தப்புள்ளியில் விலையை குறைத்து கொடுக்க இயலாது எனவும், மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்குமாறும் கோரியுள்ளார். மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

வ.எண்	பணியின் பெயர்	திரு.எம்.இரபிக் அகமது, நகராட்சி ஒப்பந்ததாரர், மேல்விஷாரம்	M/s.K.S.N.Constructions, 34, 1வது தெரு, ஆசிரியர் காலனி, குடியாத்தம்.
1.	வார்டு எண்:07, கையூம் சகர் மற்றும் வார்டு எண்:06, மார்க்பந்து நகர் ஆகிய பகுதிகளில் தார் சாலை அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால்வாயுடன் கூடிய சிறுபாலம் அமைத்தல் பணி	+4.84% மதிப்பீட்டை விட அதிகம்	+5.00% மதிப்பீட்டை விட அதிகம்

அலுவலக குறிப்பு:

மேற்படி தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் 2018-2019ன் கீழ் மேற்கொள்ள உள்ளதாலும், குறித்த காலத்தில் பணிமுடிக்க வேண்டியுள்ளதாலும் கட்டுமான பொருட்களின் தற்போதைய விலையேற்றத்தினை கருத்தில் கொண்டு மதிப்பீட்டை விட 4.84% கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.எம்.இரபிக் அகமது, நகராட்சி ஒப்பந்ததாரர், மேல்விஷாரம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அவசியம் கருதி மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்:0423/2018/இ)

தனிஅலுவலர்,
மேல்விஷாரம் நகராட்சி.

மேல்விஷாரம் நகராட்சி
நாள்:17.10.2018.

<u>அவசரக்கூட்டம்</u>

மேல்விஷாரம் நகராட்சியில் அவசரக்கூட்டம் நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் 17.10.2018ந் தேதி புதன்கிழமை மாலை 4.00 மணியளவில் நடை பெற உள்ளது.

17/10/2018

தனி அலுவலர்,
மேல்விஷாரம் நகராட்சி

1. மேல்விஷாரம் நகராட்சி 8.67 சதுர கி.மீ. பரப்பளவுடன் 21 வார்டுகளாக அமைந்துள்ளது. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மக்கள் தொகை 44786 ஆகும். இந்நகராட்சியில் தற்போது தினசரி 4.10 மில்லியன் லிட்டர் குடிநீர், நாள் ஒன்றிற்கு நபர் ஒருவருக்கு 92 லிட்டர் என்ற அளவில் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை வழங்கப்பட்டு வருகிறது.

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.17018/2018/குவ1 நாள் 23.8.2018ல் தெரிவித்துள்ளவாறு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 2018–2019ம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கான மானியக் கோரிக்கை எண்.34–ற்கான விவாதத்தின்போது, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல், சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள் அறிவிப்பு எண்.14ல் கீழ்காணும் அறிவிப்பினை வெளியிட்டார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

"மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உயர்தரம் வாய்ந்த குடிநீர் மிகக் குறைந்த விலையில் வழங்க தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic Vending Centers) நிறுவப்படும்"

மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் வார்டுக்கு 1 வீதம் தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic Vending Centers) தனியார் தொழில் நிறுவனங்களுடன்/ தொழில் முனைவோர்களுடன் இணைந்து சமூக பொறுப்புணர்வு மற்றும் பிற நிதியினை பெற்று (Corporate Social Responsibility fund) செயல்படுத்தவும், அனுபவம் வாய்ந்த மற்றும் உரிய தொழில்நுட்ப நுணுக்கங்களை கொண்ட தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்ய ஏதுவாக, அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளில் "Expression of Interest" விளம்பரம் செய்யவும் பார்வையில் கண்ட நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அறிவுரைகளின்படி இந்நகராட்சியில் அமைந்துள்ள 21 வார்டுகளிலும் தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic Vending Centers) அமைக்க மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic Vending Centers) அமைப்பதற்கான மதிப்பீடு விவரங்கள் பின்வருமாறு.

வ. எண்.	வார்டு எண்.	மதிப்பீடு தொகை ரூபாய் லட்சத்தில்
1.	1	18.00
2.	2	18.00
3.	3	18.00
4.	4	18.00
5.	5	18.00
6.	6	18.00
7.	7	18.00
8.	8	18.00
9.	9	18.00
10.	10	18.00
11.	11	18.00
12.	12	18.00
13.	13	18.00
14.	14	18.00

வ. எண்.	வார்டு எண்.	மதிப்பீடு தொகை ரூபாய் லட்சத்தில்
15.	15	18.00
16.	16	18.00
17.	17	18.00
18.	18	18.00
19.	19	18.00
20.	20	18.00
21.	21	18.00
	மொத்தம்	378.00

மேல்விஷாரம் நகராட்சியில் உள்ள 21 வார்டு பகுதிகளில் தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic Vending Centers) அமைக்கும் பணி மேலே பட்டியலில் கண்டுள்ள மதிப்பீட்டின்படி மேற்கொள்ள "Expression of Interest" கோரவும் இத்திட்டப்பணிக்கான முழுத் தொகை மற்றும் பராமரிப்புச் செலவினம் தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் பங்களிப்புடன் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

அலுவலகக்குறிப்பு.

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.0702/2018/இ1)

17/10/2018

தனிஅலுவலர்,
மேல்விஷாரம் நகராட்சி.

மேல்விஷாரம நகராட்சி

நாள்:26.10.2018.

சாதாரணக்கூட்டம்

மேல்விஷாரம் நகராட்சியில் சாதாரணக்கூட்டம் நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் 31.10.2018ந் தேதி புதன்கிழமை மாலை 4.00 மணியளவில் நடைபெற உள்ளது.

26/10/2018

தனிஅலுவலர்,

மேல்விஷாரம் நகராட்சி

பொருள்கள்:-

1. நகராட்சி ஆணையாளரின் செப்டம்பர் 2018ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு :
மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.0013/2017/சி1)

2. நகராட்சி பொறியாளரின் செப்டம்பர் 2018ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு :
மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.0013/2017/சி1)

3. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்:01 முதல் 21 வரையிலான பகுதிகளுக்கு நகராட்சி மூலம் சீரான குடிநீர் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் காவேரி கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் ரூ.26.83 கோடி திட்ட மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தினை செயல்படுத்துவதற்குரிய முழுத்தொகையினையும் தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதியம் (TNUDF) மூலம் கடனாக பெறப்பட்டுள்ளது.
மேலும், காவேரி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் பெறப்பட்டு விநியோகிக்கப்படும் குடிநீருக்கு செலுத்தவேண்டிய தொகையினை ஈடு செய்யும் பொருட்டு குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புதொகையினை திருத்தி அமைத்திட வேண்டி 30.08.2018ந் தேதிய தினகரன் நாளிதழில் பொதுமக்களிடமிருந்து ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணைகள் பெற வேண்டி விளம்பரம் செய்யப்பட்டது. இதற்கான விளம்பர பட்டியல் தொகை ரூ.6,124/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.
அலுவலகக்குறிப்பு:-
1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.2018-2019ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3.அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளலாம்.
(ந.க.எண்:1042/2016/இ1).

4. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பணியினை மேற்கொள்ளும் பொருட்டு, குறைந்த விலையில் பொதுமக்களுக்கு தரமான சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்க நகரின் முக்கிய பகுதிகளான 21 இடங்களில் பொது குடிநீர் விநியோக நிலையம் (Community Drinking Water Plant @ Approx. 1000 lit/ hour capacity) Design, Build, Finance, Operate and Transfer System (DEBOT) முறையில் அமைத்து 10 ஆண்டுகள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 03.10.2018ந் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோர 15.09.2018ந் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர், தமிழக அளவில் பிரசுரிக்கும் ஒரு தமிழ் தினசரி நாளிதழ் மற்றும் ஆங்கில நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு ரூ.1,10,729/-க்கான பட்டியல் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.

அலுவலகக்குறிப்பு:-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.2018-2019ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:0702/2018/இ1)

5. தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு நிதி 2018-2019ன் (Tamilnadu Urban Road Infrastructure Fund 2018-2019) கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:07, கையூம் நகர் மற்றும் வார்டு எண்:06, மார்க்பந்து நகர் ஆகிய பகுதிகளில் தார் சாலை அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால்வாயுடன் கூடிய சிறுபாலம் அமைத்தல் பணியினை மதிப்பீடு ரூ.50.00 இலட்சத்தில் மேற்கொள்ள 26.09.2018ந் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோருவதை முன்னிட்டு தினபூமி நாளிதழில் 08.09.2018ந் தேதியன்று விளம்பரம் செய்யப்பட்டமைக்கு ரூ.7,938/- என பட்டியல் தொகை வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.

அலுவலகக்குறிப்பு:-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.2018-2019ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3.அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:0423/2018/இ1).

6. இயக்குநர்(பொ), தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் அவர்களின் கடிதம் ந.க.எண்:0359/2017/அ2. நாள்:26.09.2018ல் தெரிவித்தள்ளவாறு 2016-2017ம் ஆண்டிற்கான இந்நகராட்சி பங்களிப்பு தொகையாக ரூ.20,000/-ஐ தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

அலுவலகக்குறிப்பு:-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.2018-2019ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3.அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்கள் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

(ந.க.எண்:0826/2018/இ1).

7. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் மினி லாரி எண் TN 23 AS-9892-ல் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்யும் பணிக்கு தோராய செலவினம் ரூ.2.00/ இலட்சத்திற்கு நகரமன்றம் தனது தீர்மான எண்.172, நாள்:31.07.2018ல் அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் 21.08.2018ந் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி பணிக்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் அனுமதி வழங்கிய தொகையை விட கூடுதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி கூடுதல் செலவின தொகை ரூ.50,000/ ஐ சேர்த்து மொத்த செலவின தொகை ரூ.2.50/ இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. 2018-2019ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்:620/2018/எச்1)

8. உள்ளாட்சி தேர்தல் 2017-க்கான வாக்காளர் பட்டியல் அச்சிட்டு சப்ளை செய்ததற்கான பட்டியல் தொகை ரூ. என RRS info Tech, வேலூர் அவர்களிடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

3.2018-2019ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்:117/2017/சி1)

9. 2018-2019ம் ஆண்டின் வரவு செலவு அறிக்கை மற்றும் ஆண்டு கணக்கினை நேர்செய்யும் பொருட்டு தனியார் மயம் கணக்கர் மூலம் பணிகள் மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.75,000/- மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.2018-2019ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்:882/2018/சி1)

10. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால்வாய்கள் மற்றும் சிறுபாலங்களில் அடைப்பட்டுள்ள சேர் மற்றும் சகதிகளை JCB இயந்திரம் மூலம் சுத்தம் செய்யம் பணிக்கு தயார் செய்ப்பட்ட மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.

அலுவலகக்குறிப்பு:-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.2018-2019ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3.பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்கள் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:124/2018/இ1)

11. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால்வாய்கள் மற்றும் சிறுபாலங்களில் அடைப்பட்டுள்ள சேர் மற்றும் சகதிகளை JCB இயந்திரம் மூலம் சுத்தம் செய்யம் பணிக்கு தயார் செய்ப்பட்ட மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்கள் முன்னனுமதி வழங்கப்பட்டதன் பேரில் 26.10.2018ந் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

வ. எண்	பணியின் பெயர்	மதிப்பீடு ரூ.இலட்சத்தில்	ஒப்பந்ததாரர் பெயர்	மதிப்பீடு விகிதம்
1.	மழைநீர் வடிகால்வாய்கள் மற்றும் சிறுபாலங்களில் அடைப்பட்டுள்ள சேர் மற்றும் சகதிகளை JCB இயந்திரம் மூலம் சுத்தம் செய்யம் பணி	3.00	திரு.எம்.இரபிக்அகமது, நகராட்சி ஒப்பந்ததாரர்	மதிப்பீட்டை விட -0.25% குறைவு
			திரு.ஜி.ஷாகிர்ஷரிப், நகராட்சி ஒப்பந்ததாரர்	மதிப்பீட்டை விட +1.75% அதிகம்

அலுவலகக்குறிப்பு:

1.மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட -0.28% குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எம்.இரபிக்அகமது, நகராட்சி ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

2.பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணிஉத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:124/2017/இ1.)

12. இந்நகராட்சி அலுவலக உபயோகத்திற்காக மின்உதிரி பொருட்கள் சப்ளை செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.
அலுவலகக்குறிப்பு:-
1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.2018-2019ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3.பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்கள் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்:124/2018/இ1)

13. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட முர்துஜா தெருவில் உள்ள சிமெண்ட் சாலைகளை செப்பனிடுதல் மற்றும் மற்றும் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.
அலுவலகக்குறிப்பு:-
1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.2018-2019ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்:124/2018/இ1)

14. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்:01 முதல் வார்டு எண்:21 வரை ஆகிய பகுதிகளில் உள்ள சிமெண்ட் சாலைகளை செப்பனிடும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.
அலுவலகக்குறிப்பு:-
1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.2018-2019ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்:124/2018/இ1)

15. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்:01 முதல் வார்டு எண்:21 வரை ஆகிய பகுதிகளில் உள்ள பகிர்மான குழாய்களில் ஏற்பட்டுள்ள நீர்கசிவினை சரிசெய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.
அலுவலகக்குறிப்பு:-
1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.2018-2019ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்:125/2018/இ1)

16. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சிறுமின்விசைபம்புகளில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.
அலுவலகக்குறிப்பு:-
1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.2018-2019ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்:125/2018/இ1)

17. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆழ்துளை கிணறுடன் கூடிய சிறுமின்விசைபம்புகளுக்கு 1.50 HP மற்றும் 5.00 HP மோட்டர்கள் சப்ளை செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.
அலுவலகக்குறிப்பு:-
1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.2018-2019ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்:125/2018/இ1)

18. இந்நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையங்களில் உள்ள மோட்டார் இயந்திரங்களில் ஏற்படும் பழுதுகளை நீக்கம் செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1.75 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.

அலுவலகக்குறிப்பு:-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.2018-2019ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:125/2018/இ1)

19. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பழுதடைந்துள்ள HDPE Tank-க்குகளை மாற்றி புதியதாக HDPE Tank 10 எண்கள் சப்ளை செய்து பொருத்தும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

அலுவலகக்குறிப்பு:-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.2018-2019ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:125/2018/இ1)

20. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட புதுப்பேட்டை பகுதியில் புதியதாக பகிர்மான குழாய் பதிக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.0.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

அலுவலகக்குறிப்பு:-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.2018-2019ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:125/2018/இ1)

21. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கையூம் நகர் பகுதியில் பகுதியில் புதியதாக பகிர்மான குழாய் பதிக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

அலுவலகக்குறிப்பு:-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.2018-2019ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:125/2018/இ1)

22. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட உஸ்மான்பேட்டை பகுதியில் உள்ள சிமெண்ட் சாலைகளை செப்பனிடுதல் மற்றும் மழைநீர் வடிகால்வாயினை பழுதுபார்த்தல் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

அலுவலகக்குறிப்பு:-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.2018-2019ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:124/2018/இ1)

23. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவின் கீழ் நாளொன்றுக்கு உற்பத்தியாகும் திடக்கழிவுகளில் எரியகூடிய தன்மையுடைய 2 மெ.டன் திடக்கழிவுகளை அரியலூர் மாவட்டத்தில் உள்ள அல்ட்ராடெக் சிமெண்ட் நிறுவனத்திற்கு விலையேதும் இல்லாமல் இலவசமாக இத்திடக்கழிவுகளை நகராட்சி வாகனம்/தனியார் வாகனத்தில் எடுத்து சென்று வழங்க நகரமன்ற தீர்மானம் எண்:142, நாள்:18.06.2018ந் தேதியன்று அனுமதி வழங்கியுள்ளது.மேற்படி அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் திடக்கழிவுகளை நகராட்சி வாகனம்/தனியார் வாகனத்தில் எடுத்து சென்று வழங்கிட ஆகும் தோராய செலவு ரூ.1.00/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. 2018-2019ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்:519/2018/எச்1)

24. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்குகாய்ச்சலை கட்டுப்படுத்தும் பொருட்டு, குடிநீர் மற்றும் மழைநீரில் உற்பத்தியாகும் புழுவை அழிக்க அபேட் மருந்து தெளித்தும் தேவையற்ற பொருட்களை அப்புறபடுத்தியும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் அவர்கள், நகராட்சிகளின் மண்டல இயக்குநர் மற்றும் துணை இயக்குநர் பொது சுகாதாரம், வேலூர். அவர்கள் பிரதிவாரம் திங்கள் அன்று நடைபெறும் ஆணையர்களின் ஆய்வு கூட்டத்தில் மகளிர் சுயஉதவி குழுக்கள் மூலம் பணியாளர்களை அமர்த்தி இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்த வேண்டும் என்று அறிவுரை வழங்கப்பட்டது.மேலும் துணை இயக்குநர் ந.க.எண்.7220/ஆ2/2016, நாள்:03.06.2016 தேதி கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு மகளிர் சுய உதவி குழுக்கள் மூலம் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்குகாய்ச்சலை கட்டுப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் இப்பணி அக்டோபர்-2018ல்முடிவடைகிறது.மேலும் பொதுசுகாதார நலன் கருதி ஆறு மாதகாலத்திற்கு மகளிர் சுயஉதவி குழுக்கள் மூலம் DBC பணியாளர்களை டெங்குகாய்ச்சல் பணிக்கு 30 நபர்களை(தற்காலிகமாக) பணியில் அமர்த்தி நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூபாய்.235/- வீதம் வழங்கவும் மேற்படி பணியினை மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.6.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்கள் முன்னனுமதி பெற்று தற்காலிகமாகDBC பணியாளர்களை டெங்குகாய்ச்சல் பணிக்கு ஈடுபடுத்தி பணியினை மேற்கொள்ள மன்றம்அனுமதிக்கலாம்.

3.2018-19ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.879/2016/எச்1)

25. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவின் கீழ் சாதிக்பாஷா நகரில் 2 எண்ணிக்கையிலான சுகாதார கழிப்பிடம் பொது மக்கள் பயன்பாட்டிற்காக உள்ளது.இக்கழிப்பிடத்தில் உள்ள செப்டிக் டேங்க் நிரம்பி பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது.எனவே பொதுமக்களின் அத்தியாவசித்தை கருதி செப்டிக்டேங்கில் உள்ள கழிவுகளை சரிசெய்து வழங்க ஆகும் தோராய செலவினம் தொகை ரூ.50,000/-க்கு மன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.2018-2019ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

3.அரசு (ம) அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:(910/2018/எச்1)

26. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு 1 முதல் 21 வார்டு பகுதிகளில் உள்ள கோவில்கள், மசூதிகள், மாதகோவில்கள், விழாகாலங்களில் மற்றும் பொதுகூட்டங்கள் நடைபெறும் இடங்களில் மற்றும் டெங்கு, சிக்கன்குன்னியா நோய் பரவாமல் தடுக்கும் பொருட்டு. இந்நகராட்சிக்கு தேவையான கிருமிநாசினியான நீர்த்த சுண்ணாம்பு வாங்கி வழங்க வேண்டி அதற்காகும் தோராய செலவினம் தொகை ரு.2.00/-இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு:

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.2018-2019ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

3.அரசு (ம) அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:(909/2018/எச்1)

27. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு உபயோகத்திற்காக புகை அடிக்கும் இயந்திரம் சரிசெய்யும் பணிக்கு நகரமன்ற தீர்மானம் எண்:104, நாள்:31.05.2018ந் தேதியன்று அனுமதி வழங்கியுள்ளது. மேற்படி அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் கூட்டுறவு நிறுவனங்களிடம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 23.06.2018ந் தேதியன்று கீழ்கண்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

வ. எண்	விவரம்	The Walajapet Agro Engineering Service Co-operative Centre Limited Walajapet	The Thirupattur Agro Engineering Service Co-operative Centre Limited Tirupattur	The Alangayam Agro Engineering Service Co-operative Centre Limited Vaniyambadi
1`	2	3	4	5
1.	இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் உள்ள புகை அடிக்கும் இயந்திரம் சரிசெய்யும் பணிக்கு	ரு.30,000/-	ரு.35,000/-	ரு.40,000/-

அலுவலகக்குறிப்பு

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.மேற்படி வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைப்பட்டியல் அளித்துள்ள The Walajapet Agro Engineering Service Co-operative Centre Limited Walajapet அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

3.பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்கள் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.441/2018/எச்1)

28. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவின் கீழ் உள்ள பகுதிகளில் குப்பைகள் மற்றும் கால்வாய் மண்களை தூர்வாரும் பணிக்கு நகரமன்ற தீர்மானம் எண்:174, நாள்:31.07.2018ந் தேதியன்று அனுமதி வழங்கியுள்ளது. மேற்படி அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் கூட்டுறவு நிறுவனங்களிடம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 23.06.2018ந் தேதியன்று கீழ்கண்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

வ. எண்	விவரம்	The Walajapet Agro Engineering Service Co-operative Centre Limited Walajapet 1 மணி நேரத்திற்கு	The Thirupattur Agro Engineering Service Co-operative Centre Limited Tirupattur 1 மணி நேரத்திற்கு	The Alangayam Agro Engineering Servic Co-operative Centre Limited Vaniyambadi 1 மணி நேரத்திற்கு
1	2	3	4	5
1.	இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவின கீழ் உள்ள பகுதிகளில் குப்பைகள் மற்றும் கால்வாய் மண்களை தூர்வாரும் பணிக்கு	ரு.1,050/-	ரு.1,060/-	ரு.1,070/-

அலுவலகக்குறிப்பு

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.மேற்படி வரப்பெற்ற முன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைப்பட்டியல் அளித்துள்ள The Walajapet Agro Engineering Service Co-operative Centre Limited Walajapet அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

3.பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்கள் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.611/2018/எச்1)

29. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் குடியிருப்பு வாசிகள், வர்த்தக வாசிகள் மற்றும் சிறுவியாகபாரிகள் ஒரு முறை பயன்படுத்தும் நெகிழி (Plastic) பொருட்கள் அதாவது, பிளாஸ்டிக் மேஜை விரிப்புகள், பிளாஸ்டிக் உறிஞ்சு குழல்கள், பிளாஸ்டிக் தட்டுகள், பிளாஸ்டிக் தூக்கு பைகள், பிளாஸ்டிக் முளாம் பூசப்பட்ட தேநீர் கோப்பைகள், ப்ளாஸ்டிக் டம்பளர்கள், பிளாஸ்டிக் தண்ணீர் பாக்கெட்டுகள், பிளாஸ்டிக் கொடிகள், டெங்கு ஒழிப்பு ஸ்டிக்கர்கள் போன்ற பொருட்கள் பயன்படுத்த கூடாது என தமிழக அரசால் விதி எண்: 110ன் கீழ் தடை விதிக்கப்பட்டுள்ளதை பொதுமக்களுக்கு தெரியும் வண்ணம் கடைகள் மற்றும் வீடுகளுக்கு ஸ்டிக்கர் அச்சடித்து ஒட்டவும், மேலும் ஸ்மைலிங் ஸ்டிக்கர் அச்சடித்து வழங்க ஆகும் தோராய செலவினம் ரு.2.00 இலட்சத்திற்கு நகரமன்ற தம் தனது தீர்மான எண்:200.நாள்:31.07.20187ல் அனுமதி வழங்கப்பட்டது.

மேலும், தற்சமயம் அனுமதிக்கப்பட்ட தொகையினை காட்டிலும் கூடுதல் செலவினம் ரு.80,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.

அலுவலகக்குறிப்பு:-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.2018-2019ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3.பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்கள் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

(ந.க.எண்:120/2018/இ1)

30. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட ஈசாக்பேட்டை 1வது தெரு மற்றும் 2வது தெருவில் உள்ள சிமெண்ட் சாலை அமைத்தல், பழுதடைந்த சிமெண்ட் சாலைகளை செப்பனிடுதல் மற்றும் பழுதடைந்துள்ள மழைநீர் வடிகால்வாயினை சரிசெய்தல் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரு.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

அலுவலகக்குறிப்பு:-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.2018-2019ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:125/2018/இ1)

31. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட ரஷீத்பேட்டை 3வது தெருவில் பகிர்மான குழாய் பதித்தல், 3" ஸ்லூய்ஸ் வால்வு சப்ளை செய்து பொருத்துதல் மற்றும் குடிநீர் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.0.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

அலுவலகக்குறிப்பு:-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.2018-2019ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:125/2018/இ1)

32. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட ரஷீத்பேட்டை 1வது தெரு, 2வது தெரு, 4வது தெரு, 5வது தெரு மற்றும் சுஆபிதேமில்லத் தெருவில் உள்ள சிமெண்ட் சாலைகளை செப்பனிடுதல் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

அலுவலகக்குறிப்பு:-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.2018-2019ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:125/2018/இ1)

33. இந்கராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தூய்மை இந்தியா திட்டம்.2015னட கீழ் கட்டப்பட்டுள்ள 8 பொதுககழிப்பிடங்களுக்கு புதிய மின் இணைப்பு வேண்டி தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மின்இணைப்பு முன்வைப்பு தொகையாக ரூ.11,263/- செலுத்தப்பட வேண்டியுள்ளது. மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

அலுவலகக்குறிப்பு-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.2018-2019ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்த செலவினத்தை மேற்கொள்ளலாம்.

3.பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:1076/2015/இ1)

தனிஅலுவலர்,
மேல்விஷாரம் நகராட்சி